**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண். 93/2025**
**CNR NO.TNKR090001202025**

முருகவேல் ... வாதி

**/எதிராக/**

சரவணன் .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 24.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது தாவா இடத்தில் வீடுகட்டி குடியிருந்து விவசாயம் செய்து சென்று வரும் பாதையை வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்**

1) வாதி தாவா இடத்தில் விவசாயம் செய்து வசித்து வருவதாகவும், தாவா சொத்திற்கு மேற்குப்புறத்தில் தாளியாம்பட்டி – அய்யர்மலை செல்லும் ரோடு உள்ளது என்றும் மேற்படி ரோட்டின் மேற்குப்புறத்தில் பிரதிவாதி சுமார் 10 சென்ட் இடத்தில் வீடு கட்டி அனுபவித்து வருவதாகவும், மேற்படி ரோட்டின் கிழக்குப்புறத்தில் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது என்றும் மேற்படி புறம்போக்கு நிலத்தை தாண்டி வாதியின் பட்டா நிலம் உள்ளது.

2) மேற்படி பட்டா நிலத்திற்கு செல்ல அரசு புறம்போக்கு நிலம் வழியாக பாதை பாத்தியத்தை வாதி சுமார் 75 ஆண்டுகளாக அனைவரும் அறிய அரசு புறம்போக்கு நிலத்தை பயன்படுத்தி வருகிறார். எனவே வாதிக்கு மேற்படி நிலத்தில் நீண்ட நெடுபோக அனுபவம் உள்ளது. பிரதிவாதி வாதியின் அனுபவத்தில் உள்ள வண்டி பாதையை அபகரிக்கும் எண்ணத்தில் கடந்த 22.05.2025 அன்று இரவு 11 மணிக்கு பாதையை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார். இதனை வாதியின் மனைவி தடுத்து குளித்தலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி பாதையை தவிர வாதி தனது பட்டா நிலத்திற்கு செல்ல வேறு பாதை எதுவும் இல்லை. வாதியின் மீது காழ்புணர்ச்சி காரணமாக பிரதிவாதி தொடர்ந்து இடையூறு கொடுத்து வருகிறார். எனவே அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) இவ்வழக்கில் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜரான பின்னிட்டு பதிலுரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4) வாதி தரப்பில், வாதி முருகவேல் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை.

5) எனவே இவ்வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியால் நீண்ட நெடுங்காலமாக பாதை போக்குவரத்திற்காக பயன்படுத்தி வருவதாகவும், அதில் பிரதிவாதி இடையூறு செய்து வருவதாகவும், எனவே பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டுமென வாதிடப்பட்டது. மேற்படி வாதத்திற்கு ஆதரவாக வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) வா.சா.ஆ.1–30.06.2024 ம் தேதியிட்ட பட்டா எண்.2326. மேற்படி ஆவணமானது வீரபத்திரபிள்ளை என்பவர் பெயரில் சர்வே எண்.555/6 க்கு ஏற்பட்டுள்ளது. இவ்வழக்கின் தாவா சொத்தானது சர்வே எண்.555/6. தாவா சொத்திற்கான பட்டா வாதியின் தகப்பனார் வீரபத்திரபிள்ளை பெயரில் உள்ளது. வாதியின் தகப்பனார் 2003 ம் வருடம் இறந்து விட்டதாகவும் அவருக்கு பின்னிட்டு வாதி தாவா சொத்தை அனுபவித்து வருவதாகவும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

8) வா.சா.ஆ.2–வாதியின் தகப்பனார் வீரபத்திரபிள்ளையின் இறப்பு சான்றிதழ். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4–பிரதிவாதிக்கு எதிராக கொடுத்த புகார் மனுக்கள். வா.சா.ஆ.5–மனு இரசீது. வா.சா.ஆ.6–தாவா மாதிரி வரைபடம். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.555/6 க்கு மேற்குப்புறம் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது என்பதும், அதன் மேற்கு புறம் ரோடு அமைந்துள்ளது என்பதும், ரோட்டிற்கு மேற்குப்புறம் பிரதிவாதியின் நிலம் அமைந்திருப்பதாக மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) இவ்வழக்கின் வழக்கு சொத்து விபரத்தில் சர்வே எண்.555/6 க்கு நான்கெல்லை விபரமாக தென்வடல் தார் ரோட்டிற்கு கிழக்கு, வீரமணி நிலத்திற்கு மேற்கு, ஆறுமுகம் நிலத்திற்கு வடக்கு, பொன்னுச்சாமி நிலத்திற்கு தெற்கு. இதில் வீட்டிற்கு சென்று வரும் பாதை வண்டி பாதை பாத்தியம் என தாவா சொத்து விபரம் கண்டுள்ளது.

10) தாவா சொத்து விபரத்தில் சர்வே எண்.555/6 க்கு மேற்கு புறம் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து வாதி தாவா சொத்து விபரமாக காட்டியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்குப்புறம் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை தனியாக காட்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தான் அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள பாதையை குறித்து தனிப்பட்ட சொத்து விபரம் எதையும் இவ்வழக்கில் சொல்லவில்லை.

11) மேலும் மேற்படி பாதை உள்ளதை நிரூபிக்க இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி அரசு புறம்போக்கு நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் மேற்படி நிலத்தையும்

சேர்த்து சர்வே எண்.555/6 க்கு நான்கெல்லைகளாக காட்டியுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதாக இல்லை. வாதி உண்மையில் அரசு புறம்போக்கு நிலத்தில் பாதை சென்று வருவதாக இருந்திருந்தால் அதை நிரூபிக்க ஆணையர் நியமன மனுவோ அல்லது வேறு புகைப்படங்களோ அல்லது 3ம் நபர் சாட்சிகளோ இவ்வழக்கில் விசாரித்து இருக்கலாம். ஆனால் அவ்வாறு எந்த ஒரு நடவடிக்கையும் வாதியால் செய்யப்படவில்லை.

12) இவ்வழக்கில் பிரதிவாதி வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்வதாக வாதி தரப்பில் புகார் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி புகார் மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ள புகார் மனு இரசீதில் 24.05.2025 அன்று புகார் ஆனது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி இரசீதில் யாருக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டது என்பது குறித்து எந்த ஒரு விபரமும் குறிப்பிட்டு காட்டப்படவில்லை. எனவே பிரதிவாதிக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் ஆனது பதிவு செய்ததாக தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்கத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) மேலும் இவ்வழக்கில் வழக்குரையில் கண்டுள்ள நான்கெல்லை விபரமானது தவறானதாகவும், அரசு புறம்போக்கு நிலத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் வழக்குரையில் கூறப்பட்டுள்ளதால் வாதி வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

14) மேலும் தாவா சொத்து என காட்டப்பட்டுள்ள இடமானது வாதிக்கு பாத்தியப்பட்ட பட்டா இடம் ஆகும். மேற்படி இடத்தை காட்ட வாதி அரசு புறம்போக்கு நிலத்தில் தனக்கு உரிமை இருப்பதாக கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே தாவா சொத்தின் மேற்குப்புறம் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் வாதி சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருப்பதாக முறையாக வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அதனை நிரூபிக்க முறையான சாட்சியமோ, ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) உண்மையில் வாதி பரிகாரம் கோர வேண்டுமெனில் அரசுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். எனவே அவசிய தரப்பினரை சேர்க்காத இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.26 16:31:46 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 முருகவேல் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.06.2024 | பட்டா எண்.2326 | கணினி நகல் |
| வா.சா.ஆ.2 | 28.10.2021 | வீரபத்திரபிள்ளை இறப்பு சான்று | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 24.05.2025 | புகார் மனு | கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.4 | 24.05.2025 | புகார் மனு | கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.5 | 24.05.2025 | மனு ரசீது | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.6 | – | மாதிரி வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.7 | – | வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** – இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.26 16:31:40 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

******************************

**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.93/2025**

**D.D.26.03.2026**

**EXPARTE**

***********************************